செ.வெ.எண் : 267

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –21.12. 2011

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம், நுக்கம் பாளையம் சுனாமி நகர் குடியிருப்பு அருகில் 19.12.2011 அன்று பிராட்வேயிலிருந்து செம்மஞ்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த அரசு பேருந்து, நேதாஜி நகர் அமனுல்லா தெருவைச் சேர்ந்த திரு. அப்துல் ஹமீது என்பவரது மகன் அப்துல் ரகீம் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த அப்துல் ரகீம் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அப்துல் ரகீமை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

***வெளியீடு, இயக்குநர்***
***செய்தி, மக்கள் தொடர்புத் துறை,***
***சென்னை-9***

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்